**கடன் தகவல் பணியகம் (CRIB) என்றால் என்ன?**

இலங்கை கடன் தகவல் பணியகம் (CRIB) என்பது கடன் தகவல் மற்றும் கடன் வாங்குபவர்களின் கடன் வரலாற்றின் ஒரு சுயாதீன களஞ்சியமாகும். அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களும் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் கடன் தொடர்பிலும் அவர்கள் தமது கடனை எவ்வாறு செலுத்துகிறார்கள் என்பது பற்றிய உண்மை தகவலையும் பணியகத்திற்கு வழங்க கடமைப்படுத்தப்படுகின்றன. CRIB ஆனது அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களாலும் இத்தகவலை பணியக தரவுத்தளத்தில் தொகுக்கின்றது.

**CRIB (இலங்கை கடன் தகவல் பணியகம்) க்கு கடன் அட்டை தகவலை அறிக்கையிடும் செயன்முறை**

வங்கி ஒரு புதிய கடன் அட்டையை கடன் உரிமையாளருக்கு வழங்கும்போதெல்லாம் கடன் வரம்பு, கடன் அட்டையின் செலுத்தவேண்டியதொகை, காலாவதியான நாட்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் / அல்லது உத்தரவாதம் அளிப்பவர்களின் தகவல் ஆகியவை மாத இறுதியில் CRIB க்கு அறிக்கையிடப்படும். அட்டை உரிமையாளர் தனது தேசிய அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கத்தின் கீழாக குத்தகைகாரருக்காக வங்கியுடன் கடன் அட்டை வசதியை தொடருகிறார்.

**CRIB அறிக்கையிடலினால் கடன்பெறுனருக்குள்ள நன்மைகள்**

- ஒரு அட்டை உரிமையாளர் கடன் அட்டையினை உரிய நேரத்தில் மீள்செலுத்தி நல்ல பதிவை பராமரிக்கும்போது எதிர்காலத்தில் வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதிகளை பெறுவது இலகுவானதாகிறது.

**அறிக்கையிட தவறுவதனால் கடன்பெறுனருக்கு உண்டாகும் தீமைகள்**

- நிதி நிறுவனங்கள் கடன் வசதிகளை வழங்கும்போது CRIB கட்டாய தேவைப்பாடாக உள்ளமையால் கடன் வசதியினை பெற்றுக்கொள்ள அட்டை உரிமையாளரால் இயலாமல்போகலாம்.
- அட்டை உரிமையாளர் நிதி நிறுவனங்களின் மேலதிக நியதி நிபந்தனைகளுக்கு கட்டுப்பட நேரிடும்.

**CRIB இல் ஒரு சிறந்த கடன் வரலாற்றுப் பதிவை பேணுவதற்கு**

- உங்களது குறைந்தபட்ச கடன் தொகை அல்லது கடன் அட்டை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தவேண்டிய மொத்தத்தொகையை உரிய திகதிக்கு முன்னால் செலுத்துங்கள்.
- உங்கள் கடன் வரலாற்றை அவ்வப்போது சரிபார்க்கவும். (www.crib.lk இல் உள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்)
- கடன் அறிக்கையில் முரண்பாடுகள் இருப்பின் உமது நிதி நிறுவனத்திற்கு அல்லது ஊசுஐடீ க்கு அறிவித்து உடனடியாக அதை சரிசெய்யவும்.
- உங்கள் கடன் செலுத்துவதற்கான இயலுமையை பாதிக்கக்கூடிய எதிர்பாராத சூழ்நிலையில் நீங்கள் இருக்கும்போதெல்லாம் உங்கள் வங்கி ∴ நிதி நிறுவனத்துக்கு அதுதொடர்பில் தெரிவித்து பேச்சுவார்த்தை நடத்தவும்.